# பொதுக்காலம் 34 ஆம் வாரம்
# இயேசு அரசர் பெருவிழா
## திருவழிபாடு ஆண்டு **B**

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் தானியேல் நூலிலிருந்து வாசகம். 7:13-14,

பதிலுரைப்பாடல்: திருப்பாடல்: 16: 5,8, 9-10. 11,

திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டிலிருந்து வாசகம். 1:5-8,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 18: 33-37

## திருப்பலி முன்னுரை - 1

அன்புக்குரியவர்களே!

ஆண்டின் பொதுக்காலம் இறுதி வாரம் அதாவது 34 ஆம் வாரத்தில் இயேசு அரசர் பெருவிழாவில் திருப்பலி வழிபாட்டில் பங்கேற்கும் இறைமக்கள் அனைவருக்கும் இயேசு அரசர் பெருவிழாவின் அன்பு வாழ்த்தைக் கூறி மகிழ்கிறேன். உண்மைக்கு சாட்சியம் கூறுவதே என் பணி, வழியும், உண்மையும், வாழ்வும் நானே என்ற இறைமகன் இயேசுவின் கூற்று அவரது பணி வாழ்வில் நிறைவேறியது. இவ்வுலகில் எத்தனை அரசுகள் ஆண்டு வந்திருக்கின்றன. ஆனால் ஒன்றுகூட நிலையான அரசு இல்லை, காரணம் உண்மை இல்லை. இயேசு இவ்வுலகிற்கு கொண்டு வந்த அரசு நிலையான அரசு. அந்த நிலையான அரசின் மக்களாக வாழ வேண்டுமென்றால நம்மிடம் உண்மை இருக்க வேண்டும். நல்ல ஆயனாகிய இயேசுவின் மக்களாக நாம் வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## திருப்பலி முன்னுரை - 2

கிறீஸ்து இயேசுவில் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே! இறை இயேசுவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள். இன்று தாய் திருச்சபையானது நம் ஆண்டவரும், மீட்பருமான இயேசுக் கிறீஸ்துவை அரசராக நினைந்து விழாக்கொண்டாடுகின்றோம்.

அவருடைய அரசும், செயற்பாடுகளும் இவ்வுலக அரசர்களினதும், அரசுகளினதும் செயற்பாடுகள் போன்றது அல்ல. அவர் நீதிமான்களையல்ல பாவிகளையே தேடிவந்தவர், தீயவர்கள் சாகவேண்டுமென்பது அவருடைய விருப்பமல்ல மாறாக அவர்கள் மனம்மாறவேண்டுமென்றே விரும்புகின்றவர். அவர் ஒரு நல்ல ஆயன். அமைதியும், அன்பும், கரிசனையும், இரக்கமும், பரிவும், பாசமும், நீதியும், உண்மையும், நேர்மையுமுள்ள ஒரு அரசன். இந்த விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில் உலக அரசுகளுக்காகவும், அரசியல், சமய, குழுக்களின் தலைவர்களுக்காகவும் இறைவனை மன்றாடுவோம். இவர்கள் அனைவரும் அழிவுக்கான சிந்தனைகளையும் திட்டங்களையும் களைந்தெறிந்துவிட்டு, மக்களின் நல்வாழ்விற்காக உழைக்கின்ற மனப்பக்குவத்தை அவர்களுக்கு அளித்து, அவர்களை வழிநடாத்தியருள வேண்டுமென்று அவர்கள் அனைவரையும் இத் திருப்பலியில் ஒப்புக்கொடுத்துச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**திருச்சபைக்காக:**

அரசர்கெல்லாம் அரசராகிய இறைவா! எம் திருச்சபையின் தலைவர்கள் அனைவரும் மக்களுக்குப் பணிபுரியவே வந்தேன் என்ற இறைவனின் வார்த்தைக்கேற்ப, தங்கள் வாழ்க்கையில் நல்ல ஆயர்களாக இருந்து, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களை நல்ல வழியில் நடத்திசெல்ல தேவையான அருளைத்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**தூயகத்தின் திருவுருவே இறைவா!**

எம் பங்கு மக்கள் அனைவரும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளை எப்போதும் தங்கள் கண்முன் கொண்டு வாழவும், மனித நேயத்துடன் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு, மதித்துவாழ தேவையான அருளைத்தந்தருளும், அனைத்துக்கும் மேலாக உமது நீதியின் அரசை விரும்பித் தேடவும், பாவம் என்னும் நோயால் உலகில் நிலவும் அன்பின்மை, ஆதரவின்மை, நம்பிக்கையின்மை, உதவியின்மை போன்றவை அகன்று, மக்கள் அனைவரும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வைக் காணச் செய்ய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கும் அன்புத் தந்தையே இறைவா!**

உலக நாடு முழுவதிலும் பெற்றோரை இழந்து வாடும் குழந்தைகள், இன்னும் உதவியின்றி பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாழும் ஏழைக் கைம்பெண்கள் ஆகியோரை உமது இரக்கத்தால் பாதுகாத்து வழி நடாத்திட வேண்டுமென்றும், நாங்கள் ஒவ்வொருவரும் கருணையும, இரக்கமும், அன்பும் உள்ளவர்களாகவும், நிபந்தனையின்றி அன்புப்பணிக்காக எம்மையே அர்ப்பணிக்கும் நல்லுள்ளத்தை எமக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் இறைவா,**

யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எல்லாருக்கும் எல்லாம் ஆன எம் அன்பு இறைவா!**

மரணத்தறுவாயிலுள்ள துன்புரும் அன்பர்கள் அனைவரும் இறைமகன் இயேசுவின் நிலையான அமைதியையும், பேரின்பவீட்டின் இன்பத்தையும் முழுமையாகப் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அனைவரையும் உயிர்த்தெழச் செய்யும் அன்புத் தந்தையே இறைவா!**

எமது நாட்டில் ஏற்பட்ட போரில் இறந்து போன அனைவருக்கும் நித்திய இளைப்பாற்றியை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.